பக்கங்கள் : ஆறு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 05 வியாழக்கிழமை (21.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 296



## பேச்சுமூலம் தீர்வுகாணும் தனது முயற்சிகளில் பங்கேற்குமாறு புலிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

### ஐ.நா. பொதுச்சபையில் நேற்று அவர் உரை

நியூயோர்க், செப்.21

விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டுவருவதற்கு சர்வதேச சமூகம் தொடர்ந்து ஆதரவு தரவேண்டும் என்று கூறியிருக் கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலி களுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார்.

அவரது நீண்ட உரையின் முக்கிய சில பகுதிகள் வருமாறு:-

புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதை இலட்சியமாகக் கொண்டதே எனது அரசு. இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் சுய கௌரவத்தோடும் சுதந்திரத்தோடும் பயமின்றியும் வாழும் சூழ்நிலையை உருவாக்குவது இந்தப் 'புதிய இலங்கை'யின் குறிக்கோளாகும்.

**பயங்கரவாதம்**

ஆனால், துரதிஷ்டவசமாக எமது நாடு பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. வேறு சில நாடுகளில் இருப்பது (06ஆம் பக்கம் பார்க்க)

# ஏ-9 வீதி உடன்படிக்கைக்கு உட்பட்டது மாற்றுப் பாதை சாத்தியமே இல்லை

## புலிகளின் வட்டாரங்கள் கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்ரெம்பர் 21

**யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கு ஏ-9 வீதி தவிர்ந்த மாற்று வழிகளைத் திறப்பதற்குப் புலிகள் உடன்படவேமாட்டார்கள். போர்நிறுத்த உடன்படிக்கையின் கீழ் - இயல்பு நிலையை மீளக்கொண்டுவருவதற்கான ஒரு நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட - ஏ-9 வீதியைத் திறந்து சிவில் போக்குவரத்துகளை மீண்டும் அனுமதிப்பதற்குப் புலிகள் தயாராகவுள்ளனர்.**

**கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் நேற்று இவ்வாறு தெரிவித்திருக்கின்றன.**

கடந்த நாற்பது தினங்களுக்கு மேலாக ஏ-9 கண்டி வீதி மூடப்பட்டுக் கிடக்கிறது.

பொதுமக்கள் தரைவழிப் பயணம் செய்வதும் நிவாரண மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதும் தடைப்பட்டிருப்பதால் குடாநாடு பெரும்பாலும் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு ஒரு முற்றுகைக்குள் உள்ளது. இதனால், மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஏ-9 வீதியின் வடக்கு முனையான முகமாலைப் பகுதியில் கடந்த மாதம் 11ஆம் திகதி மோதல் மூண்டது முதல் வீதியூடான போக்குவரத்துகள் தடைப்பட்டிருக்கின்றன.

(06ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மூவர் கொலை!

திருகோணமலை,செப்.21

திருகோணமலையில் நேற்றுமுன்தினமும் நேற்றும் இடம் பெற்ற இரு சூட்டுச் சம்பவங்களில் இரண்டு மருத்துவமனைப் பணியாளர்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

கந்தளாய் மருத்துவமனையில் பணியாற்றி வந்த ஆலங்கேணியைச் சேர்ந்த வி.மதியாபரணம் மற்றும் கிண்ணியாவைச்

(06ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகள் திருமலையை அடைந்தனர்

திருகோணமலை,செப்.21

காங்கேசன்துறையில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு புறப்பட்ட கப்பலில் பயணம் செய்தவர்கள் நேற்று மாலை திருமலை வந்து சேர்ந்தனர். கப்பலில் இருந்து இறக்கப்பட்டதும், அவர்கள் செல்ல வேண்டிய கொழும்பு, வவுனியா மற்றும் பகுதிகளுக்கு பஸ்கள் மூலம் அனுப்பப்பட்டனர்.

இக்கப்பலில் 800 பயணிகள் அழைத்து வரப்பட்டனர் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.(அ-1-151)

## களுவாஞ்சிக்குடியில் கிளைமோர் மீட்பு

செங்கலடி., செப்.21

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் கிளைமோர் குண்டு ஒன்றை நேற்றுப் புதன்கிழமை காலை விசேட அதிரடிப்படையினர் மீட்டெடுத்து செயலிழக்கச் செய்துள்ளனர். இப்பிரதேசத்தில் அதிரடிப்படையினர் வீதி ரோந்து மற்றும் கண்ணிவெடிமீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளை நேற்றுக்காலை 10.30 மணியளவில் இந்தக் கிளைமோர் வெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவின் கல்லாறு பிரதான வீதியிலேயே இக்கிளைமோர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இக்கிளை

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தாலின்போது பொத்துவிலில் களேபரம் அதிரடிப்படை சுட்டு 14 முஸ்லிம்கள் காயம்!

### பதற்றம், பீதி அதிகரிப்பு; பொலிஸ் ஊரடங்கு அமுல்

கல்முனைக்குடி, செப்.21

அப்பாவி முஸ்லிம் தொழிலாளர்கள் பத்துப் பேர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொத்துவிலில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் போராட்டத்தின்போது பரவலாகப் பெரும் வன்முறைகள் வெடித்தன.

பொத்துவில் பெரிய உல்லை 'துவய' பாலத்தடியில் முஸ்லிம்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு இடையே ஏற்பட்ட முறுகலின் உச்சக் கட்டமாக இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி 13 முஸ்லிம் மக்கள் காயமடைந்தனர். இதனையடுத்து அங்கு பொலிஸ் ஊரங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

படுகொலைகள் இடம்பெற்ற இரத்தல் வாவி காட்டுப் பிரதேசத்துக்குப் பொறுப்பான அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரிக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த அதிரடிப்படையினரே பெரிய உல்லை துவய பாலத்தடியில் முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று கூறுப்படுகிறது.

சாஸ்திரிவெளி என்னும் இடத்தில் அமைந்

(06ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளிவிவகார செயலர்களுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் டில்லியில் சந்திப்பு

கொழும்பு,செப். 21

இந்தியாவில் தங்கியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று இந்திய வெளிவிவகார இணைச் செயலர் அகமதுவை புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அத்துடன், புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள இந்திய வெளிவிவகார செயலர் சிவ்சங்கர் மேனனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தனர்.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்தும், ஈழத்தமிழர்களின் துயரங்கள் குறித்தும் அங்கு தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற சர்வதேச விவகாரங்களுக்கான இந்திய சபையின் கருத்தரங்கிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில், தற்போது புதுடில்லி சென்றி

(06ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் இருந்து அதிரடிப்படை வாபஸ் முகாம் பொறுப்பதிகாரியும் உடன் இடமாற்றம்!

### முஸ்லிம்களின் கோரிக்கைக்கு இணங்கியது அரசு

கொழும்பு, செப். 21

பொத்துவில் சாஸ்திரிவெளி மற்றும் அதனை அண்டிய பகுதி முகாம்களில் உள்ள விசேட அதிரடிப் படையினரை அகற்றிவிட்டு அங்கு இராணுவத்தினரைப் பணியில் அமர்த்தவும், சாஸ்திரிவெளி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் குணரட்ணவை உடனடியாக இடமாற்றம் செய்வதற்கும் அரசு இணங்கியுள்ளது.

பொத்துவில் பெரிய உல்லை பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களையடுத்து ஆளும் கட்சியின் முஸ்லிம் அமைச்சர்கள் நேற்று பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜபக்ஷவுடன் நீண்ட நேரம் பேச்சுகளை நடத்தினர். இதன்போதே மேற்கண்ட (06ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



19.09.2006ல் அகவை 60ஐப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் (பனை தென்னை வளம்)

**உயர்திரு. சி.ஜயாத்துரை**

அவர்கள் பனம் தொழில் வல்லுநர்களினதும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களினதும் உயர்வுக்கு ஆற்றிய சேவையினை மனதாரப் பாராட்டுவதுடன் மேலும் அவர் பல செல்வங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*பணிப்பாளர்கள், பணியாளர்கள்,*
*வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும்.*

# நினைந்துருகல்

ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவர்தான பிரதம குருவும் மகோற்சவ கால குரு கலாநிதி கு.ஜெகதீஸ்வரக்குருக்களின் மைத்துனருமான

**அமரர் பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் பாலகிருஷ்ண சர்மா**

[இளைப்பாறிய பிரதி முகாமையாளர் - இலங்கை போக்குவரத்துச்சபை]

**தோற்றம்** 19 - 09 - 1956



**மறைவு** 17 - 09 - 2006

*எமது குடும்பத்தவரின் நல்வாழ்வினை மனம்கொண்டு அனுதினமும் ஆயக்கடவை ஐங்கரனின் திருமேனிதீண்டி பெரும்பணி செய்து பெருவாழ்வு பெற்ற ஐயாவின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தவரின் துயரில் எமது குடும்பமும் பங்குகொள்வதுடன், ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.*

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

அமரர் இ.தர்மலிங்கம் (முன்னாள் சுகாதார போதனாசிரியர்) குடும்பத்தினரும், வைத்திய கலாநிதி இ.நன்னித்தம்பி (அகில இலங்கை சமாதான நீதிவான்) குடும்பத்தினரும் (மகோற்சவகால 4ஆம் நாள் உபயகாரரும், மார்கழிமாத சதுர்த்தி உபயகாரரும்)

புன்னாலைக்கட்டுவன்.

# மரண அறிவித்தல்கள்

## *சதாசிவம் வீரசிங்கம் (அப்பாத்துரை)*

***(இளைப்பாறிய பொறியியலாளர், தே.வீ.அ.சபை)***

அம்பனை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் 70, ஆத்திசூடிவீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் வீரசிங்கம் நேற்று (20.09.2006) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - நல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற நித்தியானந்தம் - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் முரளிதரன் (ஜேர்மனி), லிங்காதரன் (நோர்வே), தயாதரன் (கனடா), காயத்திரி, ரவிதரன், சாவித்திரி (ஆசிரியை, சென். சேவியர் பெண்கள் பாடசாலை, மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பகலா (ஜேர்மனி), தில்லைவதனா (நோர்வே), சுமிதா (கனடா), மாணிக்கதாசன் (கச்சேரி, யாழ்ப்பாணம்), மதிரூபன் (ஆசிரியர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), வதனி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2006) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*70, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்.*

தகவல்:
**காயத்திரி (மகள்).**

## *கந்தப்பு அழகரட்ணம்*



உடுவில் ஸ்ரீலங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு அழகரட்ணம் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவன்) 17.09.2006 கொழும்பில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று (21.09.2006) வியாழக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீ லங்கா வீதி,*
*உடுவில்.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

## *வாரித்தம்பி சதாசிவம் (தம்பிராசா)*

வேம்பிராயைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி சதாசிவம் நேற்று (20.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் சியாமளாவின் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) பாசமிகு தந்தையும் கந்தசாமி சுரேஸின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2006) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கத்தானை வீதி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
**சுரேஸ் (மருமகன்)**

# சுன்னாகத்தில் பதற்றம்

யாழ்ப்பாணம்,செப்.21

சுன்னாகம் சந்திப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் பணியில் இருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் இரண்டு படையினர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது. பின்னர் நிலைமை வழமைக்குத்திரும்பியது.

(அ-1)


**படிவங்கள்**

★ கிராமசேவகர் தரம் II
மு.தி.29.09.2006
★ பட்டப்படிப்பு - டிப்ளோமா
மு.தி. 29.09.2006
★ கடற்றொழில் பரிசோதகர் மு.தி. 16.10.2006
★ முகாமை உதவியாளர் அதியுயர் வகுப்பு
மு.தி.05.10.2006
★ மண் பரிசோதகர் பயிலுநர் மு.தி. 09.10.2006
★ சுகாதார சேவைகள் முகாமி
மு.தி.க.தி. 09.10.2006

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

ஆவரம் பிரிண்டேர்ஸ், கைதடி, கந்தர்மடம்

## தேவை

எமது நிறுவனத்தை நிர்வகிக்கக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: கணேசன் கொமினிக்கேசன், கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி.
T.P. 021 222 2585, 222 3202

## விற்பனைக்கு

1400W, 2800W Japan Honda ரக ஜெனறேற்றர்கள் ஒடியோ டப்பிங் இன்செற்டெக், DVD றெக்கோடர் 200W பைனியர் டெக்செற் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஊர்மிளா ஸ்ருடியோ, 3ஆம் கட்டை, கல்வியங்காடு.

## உடன் தேவை

வெளிக்கள உத்தியோகத்தர்கள் (ஆண்/பெண்)
வயதெல்லை 18-30
கல்வித்தகமை G.C.E. (O\L)
சம்பளம் ரூபா 10,000 - 12,000 வரை
விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
**P.M.C.**
54/B, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


# தசாகாதி கிரஹயஜ்ஞ அழைப்பும் நன்றி நவிலலும்

எமது அன்புத்தாய்

**திருமதி சண்முகசுந்தரக்குருக்கள் பிரசாதம்மா**

*அவர்கள் இயற்கையெய்திய செய்தியறிந்து உடன் வந்து துன்பத்தில் பங்குகொண்டு, உதவி ஒத்தாசைகள் புரிந்தும் இறுதிச்சடங்கு நடைபெற சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், தபால், தந்தி, தொலைத்தொடர்பு மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோர்க்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து வெளியிட்டோருக்கும் மற்றும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று [21.09.2006] வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**சிவஸ்ரீ.ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்,**
**(ஸ்ரீ ஐயா, மகன்)**

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்*

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

# அறிவித்தல்

*எமது ஆலய இவ்வருட நவராத்திரிவிழா நாட்டின் தற்கால சூழ்நிலை காரணமாக நடைபெறமாட்டாது. நவராத்திரிகால விசேட பூஜை தினமும் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.*

**பரிபாலன சபை**

ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம், சரசாலை.

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
## அறிவித்தல்

*சகல வெதுப்பக உரிமையாளர்களுக்கும் தங்களால் ஏற்கனவே [11.08.2006இற்கு முன்னர்] பாண் விநியோகிக்கப்பட்ட சகல பிரதேசங்களுக்கும் தற்பொழுதும் பாண் விநியோகிக்கப்படுகிறது என்பதை உறுதிசெய்தல் வேண்டும். வெதுப்பகங்களுக்கு வழங்கப்பட்ட மாவில் அச்சுப்பாண் மாத்திரமே உற்பத்தி செய்யப்படவேண்டும். றோஸ் பாண் மற்றும் வேறு வடிவங்களில் பாண் உற்பத்தி செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மீறும் வெதுப்பகங்களுக்கு மா விநியோகம் உடனடியாக நிறுத்தப்படும்.*

**- நிர்வாகம்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**பிறப்பு** 25 - 03 - 1920



**இறப்பு** 22 - 08 - 2006

**அமரர் கார்த்திகேசு சின்னம்மா**

*இன்று [21.09.2006] வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*[இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]*

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு.*

கா.சிவநாதன் (மகன்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்** 27 - 08 - 1924



**மறைவு** 22 - 08 - 2006

**அமரர் குருநாதர் கந்தையா**

*(குருநாதர் கோயில் பூசகர்)*

குருநாதர் எனும் திருத்தலத்தில்
சுடர் ஏற்றிய பூசகரோ
அன்னிய தேசத்தில் இருக்கும் - உங்கள்
பிள்ளைகளின் அழுகுரல் கேட்க வில்லையா - ஐயா
எப்பதான் உங்கள் வார்த்தை - ஒலி
எம் செவியில் வந்து ஒலிக்கப்போகுது - ஐயா

*அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று [21.09.2006] வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.*

*கைதடி வடக்கு,*
*கைதடி.*

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.


Your Partner in IT Solutions **STP**




(Online வகுப்புக்களாக நடைபெறும்)
ஒரு பிரிவில் 10 பேர் மட்டும் பங்குபற்றலாம்

Syllabus
1. Dos Operating System
2. Windows
3. Problem Identification
4. Hardware Installation
5. Software Installation
6. Drivers

**Course Fee: 4000.00**

தொடர்புகளுக்கு/ பதிவுகளுக்கு:
595,K.K.S Road, Manohara Junction, Jaffna.
www.stpjaffna.com

73, Palaly Road, Kantharmadam
Jaffna. T.P:2222674


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிம்பிறவுண் அடிகளாரை விடுதலை செய்க; இல்லையேல் நீதிமன்றத்தில் நிறுத்துக!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்கக் குருவான ஜிம்பிறவுண் மற்றும் அவரது உதவியாளரையும் உடன் விடுதலை செய்ய வேண்டும். அல்லது அவர்கள் குற்றம் ஏதும் இழைத்திருந்தால் அவர்களை உடனடியாக நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும்.

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு ஜனாதிபதியை மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது

எமது நீதி, சமாதான ஆணைக் குழு ஏற்கனவே இரண்டு வேண்டுகோள்களைத் தங்கள் கவனத்திற்குச் சமர்ப்பித்துள்ளது. எங்கள் ஆயரும் இலங்கை ஆயர் மன்றத்தினரும் திருத்தந்தையின் தூதுவரும் ஏற்கனவே வேண்டுகோள்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஆயினும் இதுவரை தங்களிடமிருந்து பதிலேதும் கிடைக்காதது எம்மைக் கவலைக்குள்ளாக்குகிறது.

சம்பவம் நிகழ்ந்த அல்லைப்பிட்டிப் பகுதி முழுவதும் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளது. ஆகவே, அவர்களை அறியாமல் எமது குருவுக்கு எதுவும் நடந்திருக்க முடியாது என்பது வெளிப்படை. முப்படைகளின் தளபதியாகிய தாங்கள் குருவானவர் காணாமல் போனது தொடர்பாக உண்மையை வெளிக் கொணர முடியும் என்றே இன்று நாங்கள் நம்புகின்றோம்.

குருவானவரையும் உதவியாளரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அல்லது அவர்கள் குற்றமேதும் இழைத்திருந்தால் உடனடியாக நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

அவர் கைது செய்யப்படவில்லையென்றால் அவர் காணாமல் போனது தொடர்பாக உண்மைகளை வெளிக்கொணரக் கூடிய சுயாதீன விசாரணையை ஆரம்பித்தல் - என்றுள்ளது. (1)

## அடிப்படைச் சிங்கள மொழிப் பயிற்சி மீண்டும் ஆரம்பம்

கைதடி, செப்.21

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் அரச அலுவலகர்களுக்கு யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்று பின் நிறுத்தப்பட்டிருந்த அடிப்படை சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு மீளவும் வழமை போல் நடைபெற இருப்பதாக யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

எனவே, இந்த அடிப்படை சிங்கள மொழிப் பயிற்சி வகுப்பில் முன்னர் தவறாது கலந்து கொண்ட உத்தியோகத்தர்களைக் கலந்து கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ப-75)

## வலி.கிழக்கில் அனுமதி பெறாது கட்டடம்அமைப்பதைத் தவிர்க்கவும்

யாழ்ப்பாணம், செப்.21

வலி. கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் சபையின் அனுமதியைப் பெறாதும் சபைச் சட்டங்களுக்கு உட்படாத வகையிலும் கட்டடங்கள் அமைப்பதைத் தவிர்க்குமாறு வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையையும் போக்குவரத்துப் பிரச்சினையையும் சாதகமாகப் பயன்படுத்தி பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது பிரதேச சபைச் சட்டங்களுக்கு உட்படாத வகையில் பல கட்டடங்கள், சுற்றுமதில்கள் என்பன வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, கட்டடங்கள், சுற்றுமதில்கள் என்பவற்றை அமைப்பவர்கள் சட்டப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று அவற்றினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலி.கிழக்கு பிரதேசசபைச்செயலர் மேலும் கேட்டுள்ளார்.(202)

## கிளிநொச்சியில் கண்டனப் பேரணியும் சர்வமதப் பிரார்த்தனையும் இன்று

யாழ்ப்பாணம்,செப்.21

கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தினர் இன்று சர்வமதப் பிரார்த்தனை ஒன்றையும் மாபெரும் கண்டனப் பேரணியையும் நடத்தவுள்ளனர். புனித திரேசாள் ஆலயத்தில் சர்வமதப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து அரசுக்கு அழுத்தங் கொடுக்கக்கோரி கண்டனப் பேரணி ஒன்றும் இடம் பெறவுள்ளது.

பட்டினிச்சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் குடாநாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான அவசர சேவையாக குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையைத் திறக்குமாறு கோரியும் -

குடாநாடு மற்றும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெறும் ஆள்கடத்தல்கள், மனிதப் படுகொலைகள், பொருளாதாரத் தடை, மருந்துப் பொருள் தட்டுப்பாடு போன்ற மனிதநேயமற்ற செயற்பாடுகளுக்கு எதிராகவும் -

காணாமற்போன பங்குத்தந்தை ஜிம்பிறவுண் அடிகளார், அவரின் உதவியாளர் ஆகியோரின் விடுதலையை வலியுறுத்தியும் - இந்தக் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது. (203)

## நவராத்திரி விழாக்கள்

ஏழாலை ஆத்ம ஜோதி மணிமண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முதல் 10 தினங்கள் நவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை அதிபர் நா. முருகையா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ப-79)

* * *

தெல்லப்பழை துர்க்கை அம்மன் ஆலய நவராத்திரி விழா நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மானம்பூ தினத்தன்று காலை 9 மணிக்கு வாழை வெட்டும் இடம்பெறும். (68-203)

## மரக்கறிக் கடைகளாக மாறிவரும் தேநீர் கடைகள்

யாழ்ப்பாணம்,செப்.21

குடாநாட்டில் ஏற்பட்டுள்ளஅசாதாரண சூழ்நிலை காரணமாகத் தொழிலின்றி இருப்பவர்கள் வீடு வீடாக மரக்கறி, முந்திரிகைப் பழம், மாம்பழம் என்பவற்றை விற்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதேவேளை, நவாலி, ஆனைகோட்டைப் பகுதியிலுள்ள சில தேநீர்க் கடைகளும் மரக்கறி விற்பனைக் கடைகளாக மாறியுள்ளன. மா, சீனி, விறகு என்பவற்றின் தட்டுப்பாட்டைத் தொடர்ந்தே இக்கடைகள் இவ்வாறு மாறியுள்ளன. சில தேநீர்க் கடைகள் முழுமையாக இழுத்து மூடப்பட்டுள்ளன. (ப-150)

## நுண்கலை வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.21

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் இலவச நுண்கலை வகுப்புகள் நாளை மறுதினம் நவராத்திரி தினத்தன்று ஆரம்பமாகவுள்ளன. நல்லூர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் வகுப்புகளில் பண்ணிசை, மிருதங்கம், வயலின் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பழகவிரும்புவோர் நல்லூர் ஆலய முன்றலிலுள்ள நாவலர் மண்டபத்தில் விவரங்களைப் பதிவு செய்யுமாறு இந்து கலாசார திணைக்களத்தினர் கேட்டுள்ளனர். (79-203)

## வெளிமாவட்டங்களுக்கு செல்லமுடியாதவர்களின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,செப்.21

ஏ-9 வீதி மூடப்பட்டதால் வெளிமாவட்டங்களில் உள்ள தமது குடியிருப்புக்களுக்கு செல்ல முடியாமல் யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ளவர்களின் விவரங்கள் பிரதேச செயலக ரீதியில் திரட்டப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தில் திரட்டப்பட்ட விவரங்கள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ப-111)

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில் சுகாதார சேவைகள்

யாழ்ப்பாணம்,செப்.21

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் சுகாதாரத் தொண்டர்கள் நேற்று புதன்கிழமை முதல், இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள முகாம்களில் சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மக்கள் தங்கியுள்ள முகாம்களில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்வது குறித்து யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் நடவடிக்கைகளை எடுத்திருந்தார். (ப-111)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

தென்மராட்சி,செப்.21

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் 7 நலன்புரி நிலையங்களுக்கு பௌசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கிணங்க சாவகச்சேரி நகர சபையினர் பௌசர் மூலம் தினமும் குடிதண்ணீர் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ப-117)

## விசாரணை நடத்தும் பொறுப்பு சி.ஐ.டியினரிடம் ஒப்படைப்பு

கொழும்பு,செப்.21

பொத்துவில் பிரதேசத்தில் முஸ்லிம்கள் பதினொரு பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நடத்தும் பொறுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாரிடம் (சி.ஐ.டியினரிடம்) ஒப்படைக்கப்பட்டுள்ள தாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேற்று முன்தினம் மாலை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட குற்றப்புலனாய்வுப் பொலி ஸார் முற்பகல் வேளையில் பொத்துவில் பகுதியில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொத்துவிலில் கொலை இடம்பெற்ற பகுதிகளில் இருந்த மக்கள் மற்றும் அந்தப் பகுதி யிலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குற்றப் புலனாய்வுத் துறையினரை விசார ணைகளின் பின்னர் விசேட அறிக்கையொன் றைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு தாம் கேட்டிருக்கிறாரென பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மேலும் கூறினார்.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்ப வத்துடன் விசேட அதிரடிப்படையினருக்குத் தொடர்புகள் ஏதும் உள்ளனவா என்பதைக் கண்டறி வதற்காகத் தனியான விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரியும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிமல் லொக்குகே தெரிவித்துள்ளார். (உ)

## பெரும்போகத்துக்கு மானிய விலையில் உரம் கிடைக்க வழி செய்யுங்கள்

### அரச அதிபருக்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் கடிதம்

யாழ்ப்பாணம், செப்.21

தென்பகுதியில் விவசாயிகளுக்கு நெற்செய்கையின்போது மானிய விலையில் உரம் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டதுபோன்று யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் பெரும்போக நெற்செய்கையின் போது மானிய விலையில் உரம் வழங்க யாழ். அரச அதிபர் முன்வர வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவ சாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ. மா.க. முதலியார் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 214 விவசாய சம்மேளனத்தின் கீழ் உள்ள விவசாயிகள் பெரும்போக நெற்செய்கைக்குத் தயாராகியுள்ளனர். மழை ஆரம்பித்தவுடன் விதைப்பு ஆரம்பமாகும்.

இக்காலங்களில் விவசாயிகளுக்கு இப்போதைய சூழலில் உரம் கிடைப்பது அரிதாகும். எனவே, யாழ். அரசாங்க அதிபர் எமது வளத்தின் முக்கிய தேவையான விவசாய நெற்செய்கைக்குத் [illegible] இன்றி தேவையான உரத்தை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று முதலியார் குறிப்பிட்டுள்ளார். (ப-95)

## தொழிலகங்களுக்கு எரிபொருள் அட்டை

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ். பிரதேச செயலக பிரிவில் இயங்கும் வியாபார நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு எரிபொருள்பங்கீட்டு அட்டை வழங்கப்பட உள்ளன.

இந்த எரிபொருள் பங்கீட்டு அட்டையைப் பெறவிரும்புவோர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(1-190)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

815 நீலம்

வெற்றி இலக்கங்கள்

01 27 42 48

மகரம்

19-09-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4533898 - 4550581

ஜக்பொட் பரிசு ரூபா.9,348,100/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 371,027 | 10/- | 3,710,270/- |
| 2 இலக்கங்கள் | 34,120 | 20/- | 682,400/- |
| 1 இல. + லக்கினம் | 33,666 | 30/- | 1,009,980/- |
| 2 இல. + லக்கினம் | 3,060 | 100/- | 306,000/- |
| 3 இலக்கங்கள் | 913 | 500/- | 456,500/- |
| 3 இல. + லக்கினம் | 83 | 5,000/- | 415,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 9,348,100/- | 9,348,100/- |
| மொத்தம் | | | 16,328,250/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 442,879 | | 17,351,750/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.5428595 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 செப்டம்பர் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 4541761-2-11 |
| புத்தளம் | 4540210-0-50 |
| கொழும்பு | 4546959-7-28 |
| கொழும்பு | 4548269-4-5[illegible] |
| அனுராதபுரம் | 4544949-9-[illegible] |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சை விட்டகலா
## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | வின்ணில் |
|---|---|
| 08 | 08 |
| 08 | 08 |
| 1977 | 2006 |

## இரத்தினவேல் அகிலன்

*(பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்- கண்டிவீதி, அரியாலை)*

*குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*வாழ்ந்திட்ட எம் சுடரே*
*பாசமுடன் நாம் தேட*
*பறந்து எங்கு சென்றாயோ?*
*என்றும் மறக்க முடியாத பாச நினைவுகளுடன்*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக*
*இறைவனிடம் இறைஞ்சுகிறோம்*

08.08.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இரத்தினவேல் அகிலன் அவர்களின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை இன்று (21.09.2006) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப.10.00 மணியளவில் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும். இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22, இலந்தைக்குளம் வீதி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(53823)

தகவல்:
**அன்பு மனைவி,**
**குடும்பத்தினர்.**

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



| முத்தாக | வித்தாக |
|---|---|
| 22 | 26 |
| 10 | 09 |
| 1954 | 2000 |

## திருமதி கலைமணி இராசதுரை

அம்மா அம்மா எங்கள் ஆருயிரே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உன்தன் அன்புக்கு ஈடாகுமா?
ஆசையுடன் எமை வளர்த்து
நல்வழியில் வாழ வழிகாட்டி
இன்று தனியே எமை தவிக்கவிட்டு
ஒருநொடியில் எங்கேயம்மா சென்றீர்கள்
ஏனம்மா ஒருமுறை ஏனும் எங்களை காண
ஓடோடி வரமாட்டீர்களா? அம்மா!

**என்றும் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*குடமியன்,*
*வரணி*

(53829)

*பிரிவால் வாடும்,*
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் வேலுப்பிள்ளை கனகராசா



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06-05-1924 | 22-08-2006 |

*அன்னையாய் தந்தையாய்*
*குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*வாழ்ந்திட்ட எம் தந்தையே*
*மாதம் ஒன்று சென்றாலும்*
*மாறாது எம் துயரம்!*
*எத்தனை ஆயிரம்*
*உறவுகள் தான் இருந்தென்ன*
*அப்பா என்றழைக்க*
*நீங்கள் இல்லையே எம் அருகில்!*
*தேர் மீது ஏறி வீதி உலா வந்துவிட்டு*
*தன்னடிக்கே அழைத்துச்செல்ல*
*நல்லூர்க் கந்தன் தான் உங்களிடம் வந்தானோ*
*பிரிந்தது தான் உங்கள் உயிர்*
*பிரியவில்லை உங்கள் உறவு!*

என்றும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

(53784)

*எமது குடும்பத் தலைவரின்*
*பிரிவால் வருந்தும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மருந்தகம் இயங்குகிறது

தென்மராட்சி.செப்.21

யுத்த அனர்த்தங்களால் மூடப்பட்ட வரணி மத்திய மருந்தகம் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

மருந்தகத்தில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்குவதாகவும் தற்போதைய சூழ்நிலை காரணமாக பிரசவ விடுதி இயங்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

## கூட்டுறவுப் பணியாளருக்கு உத்தியோக அடையாள அட்டை

தென்மராட்சி.செப்.21

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு உத்தியோக அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோருக்கு அடையாள அட்டைகள் வழங்க சங்கத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## கருத்திட்டம் திரும்பியது

யாழ்ப்பாணம்.செப்.21

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் கையொப்ப சிபார்சு இல்லாமல் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட கருத்திட்டம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

மானிப்பாய் - டச்சு வீதியில் கருத்தரங்கு மண்டபமும் கலாசார மண்டபமும் அமைப்பதற்கான கருத்திட்டம் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டு பிரதேச சபை செயலாளரின் சிபார்சுடன் வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரின் கையொப்ப ஒப்புதல்களுடன் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டது.

அரசாங்க அதிபரின் சிபார்சினைப் பெற்று உடன் அதனைத் திருப்பி அனுப்பிவைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இ.இளங்கோவன், வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளரை கடிதமூலம் கேட்டுள்ளார். (ப-95)

## படகுசேவைக்கு ஏற்றாற்போல் பஸ்சேவை

நல்லூர்.செப்.21

நெடுந்தீவுக்கான இ.போ.சபையின் போக்குவரத்துச் சேவையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறுகின்றது.

தற்சமயம் படகுச்சேவைக்கு இசைவானதாக மட்டும் பஸ்சேவை இடம்பெற்று வருகின்றது. (ப-111)

## நெடுந்தீவுக்கான மின்சார விநியோகம் நெடுநாளாகத் தடை

நல்லூர்.செப்.21

நெடுந்தீவுக்கான மின்சாரவிநியோகம் நீண்ட நாள்களாகத் தடைப்பட்டுள்ளது.

மின்பிறப்பாக்கி இயந்திரம் முதல் தடவை பழுதடைந்தது. அது திருத்தி அமைக்கப்பட்டது. எனினும் குறிப்பிட்ட இயந்திரம் மீண்டும் பழுதடைந்ததின் காரணமாகவே மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் கணிசமாக கையிருப்பில்இருக்கும்போ[illegible] அடிக்கடி மின்ட[illegible]ப் பாக்கி பழுதடைவதினால் பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. (ப-111)

## இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.21

திருநெல்வேலி சத்திய சாயி சேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் வரை நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு சமுகமளித்து இரத்த தானம் வழங்குமாறு நிலை[illegible] ஆர்வலர்களைக் கேட்டுள்ளார். (1)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் கனகரத்தினம்
### (பத்தர்)



மடத்தடி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், 55/2 மோதரை வீதி, கொழும்பு-15 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகரத்தினம் நேற்று (20.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சந்திரகுமாரி (ஆசிரியை-வேம்படி மகளிர் கல்லூரி), லதாகுமாரி, பகீரதன் (சுவிஸ்), கீதாகுமாரி (லண்டன்), ரஜிதாகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராணி, நடராஜா (லண்டன்), அன்னராணி, பவளராணி, காலஞ்சென்ற செல்வராஜா, கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசேந்திரம், காலஞ்சென்ற ஜெயசேகரா, விஷ்வகுமார், பாலகிருஸ்ணன், தியாகராசா, பஞ்சாட்சரம், மயில்வாகனம் (கனடா), கனகம்மா, சிவபாக்கியம், சிவமணி (தொழில் திணைக்களம் -யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தவஜோதி, பத்மசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சாம்பவியின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*671/3, பூநாறி லேன்,*
*கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*55/2, மோதரை வீதி,*
*கொழும்பு-15.*
*தொ.பே : 0112529872*

*தகவல்:*
**க.சந்திரகுமாரி** *(மகள்).*
**ஜே.நகுலன்** *(மருமகன்).*

### திருமதி குமாரசாமி சின்னம்மா



கிராம்புவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் கிழக்கு, கரவெட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சின்னம்மா 18.09.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-பானுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, கார்த்திகேசு மற்றும் வினாசித்தம்பி, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன், உமையம்மை, அம்பிகை(கொழும்பு), அருந்ததி, பார்வதி, பரமேஸ்வரி, பரஞ்சோதி (Belgiam) ஆகியோரின் அன்புத் தாயும் சசிகலா, செல்லையா, றொஜர் பெர்னான்டோ (கொழும்பு), சங்கரப்பிள்ளை, சிறீபாலகிருஸ்ணன், தவலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று முன்தினம்(19.09.2006) கரணவாயில் நடைபெற்று, பூதவுடல் கரணவாய் சோனப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***விக்னேஸ்வரா வீதி,***
***கரணவாய் கிழக்கு, கரவெட்டி.***
*தொ.பே 011 2540257*

(53819)

**தகவல்:**
**கு.சண்முகநாதன்** *(மகன்)*
**செ.யசோதரன்** *(பேரன்)*

### செல்லப்பா சோமசுந்தரம்

வேலணை, சலயாவத்தையை பிறப்பிடமாக கொண்டவரும், தற்பொழுது பரிஸ் நகரில் வசிப்பவருமாகிய செல்லப்பா சோமசுந்தரம் 16.09.2006 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-முத்துப்பிள்ளை தம்பதியரின் இளையமகனும் காலஞ்சென்ற பாலசிங்கம்-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் கமலாவதியின் அன்புக்கணவரும் கோணேஸ்வரன் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (பரிஸ்), உலகேஸ்வரன் (பரிஸ்), சுமதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமாவதி (ஜேர்மனி), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், குருசோத், பிரவின் ஆகியோரின் பேரனும் கனகரத்தினம், காலஞ்சென்ற தங்கம்மா, பாக்கியலட்சுமி, அன்னலட்சுமி, சண்முகநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2006) வியாழக்கிழமை பரிஸில் நடைபெறும் என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பரிஸ்.
*T.P.No* 0033145911676 (53808)

*தகவல்,*
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

### பொன்னுத்துரை சண்முகலிங்கம்

**(பிரபல கொழும்பு வர்த்தகர்)**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு,புதுச்செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சண்முகலிங்கம் 18.09.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார்(பிரபல காண்டம் சோதிடர்) காலம் சென்ற செல்லையா பொன்னுத்துரைஅரசரத்தினம் தம்பதியரின் புதல்வரும் சிவயோகநாயகியின் அன்புக்கணவரும் ரவிசங்கரின்(அவுஸ்திரேலியா) அன்புத்தந்தையும் நதிகாவின் அன்பு மாமனும் சீதாலட்சுமி (காலம் சென்ற பிரபல வர்த்தகர், புதுச்செட்டித்தெரு) சங்கரசிவம், பிரபல வைத்தியர் பரமலிங்கம், கமலாம்பிகை(லண்டன்) மகேஸ்வரி (அவுஸ்திரேலியா) விக்கினேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 4மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இன்று அவரது சகோதரர் பரமலிங்கம் அவர்களின் கொக்குவில் மேற்கு இல்லத்தில் துக்க நிகழ்வு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிராசா வீதி,*
*கொக்குவில் மேற்கு.* (53820)

*தகவல்,*
**பொ.பரமலிங்கம்** *(வைத்தியர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# அடக்குமுறை அகன்றால் மட்டுமே உண்மையான சமாதானம் சாத்தியம்

இன்று சர்வதேச சமாதான தினம்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அமைய செப்டெம்பர் 21 ஆம் திகதி, சர்வதேச சமாதான தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கை மக்கள் - குறிப்பாக ஈழத் தமிழர்கள் - தங்களுக்கு எட்டாத, கிட்டாத ஒரு விவகாரம் சம்பந்தமான தினத்தை இன்று அனுஷ்டிக்கின்றார்கள்.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை சமாதானம் என்பது ஒரு கானல் நீராகத் தோற்றுவது இந்த நாட்டின் சாபக்கேடு.

பெரிய போராட்டங்கள் எதுவும் நடத்தாத நிலையிலேயே 'சுதந்திரம்' என்ற அரிய பொக்கிஷத்தைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து பிரிட்டிஷார் இலங்கைத் தீவின் தலைவர்களிடம் 58 ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்படைத்தனர். ஆனால், அதனைப் பேணிப் பாதுகாத்து, சீர் செய்வதற்குப் பதிலாக மேலாண்மைவாத - பேரினவாத - சிந்தனையில் ஊறிய சிங்களத் தலைவர்கள், அந்தப் பெருமை மிகு சுதந்திரத்தை இனவாதக் கொடூரத்துக்கான அதிகார ஆவணமாகப் பயன்படுத்தி, பெற்ற சுதந்திரத்தையும் சீரழித்து, நாட்டையும் சீர்கெடுத்து, அனைத்தையும் குட்டிச்சுவராக்கி, இந்தத் தீவை யுத்த பூமியாக்கி விட்டார்கள்.

வன்முறைகள் இடம்பெறாவிட்டால் மட்டும் அப்பூமியில் சமாதானம் நிலவுகின்றது என்று அர்த்தமாகி விடாது. யுத்தமில்லாமல் மயான அமைதி பேணப்படுவது மாத்திரம் சமாதானமாகி விடாது. வெளிப்பூச்சுக்கு சமாதானம் தோற்றும் தேசங்களில் கூட உள்ளே - வெளிப்படாத வகையில் - ஆரவாரமில்லாத ஒரு பெரும் யுத்தம் கனன்று கொண்டிருப்பதை உலகம் இன்றும் தரிசித்து நிற்கின்றது.

மானிட சமூகம் இன்னும் உன்னதம் பெறவில்லை. மனிதர்களிடையே இன்னும் பிணக்குகள் தீர்ந்து விடவில்லை. முரண்பாடுகள் நீங்கிவிடவில்லை. வர்க்கபேதம் ஒழிந்து விடவில்லை. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அகன்று விடவில்லை. இன ஒதுக்கல் மறைந்து விடவில்லை. அடக்குமுறை நீடிக்கின்றது. சமத்துவமின்மை தொடர்கின்றது. சமூகச் சீர்கேடுகள் தலைவிரித்தாடுகின்றன. மொத்தத்தில் அநீதியே பல இடங்களிலும் ஆட்சி புரிகின்றது.

இதனால், மனித சமூகங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. இனங்களிடையே பகை முற்றி, குரோதம் உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில் கொடூரப் போர்கள் நீடிக்கின்றன. ஒரு தேசம் மீது மற்றொரு தேசம் படையெடுக்கின்றது. ஆக்கிரமிப்புகள் இடம்பெறுகின்றன. அவற்றுக்கு எதிராகப் புரட்சியும், கிளர்ச்சியும் வெடிக்கின்றன. வன்முறையும், பேரழிவுகளும் வரலாற்றுப் பக்கங்களை நிறைவு செய்ய, மானிடத்தின் சரித்திரத்தில் இரத்த ஆறு ஓடுவது நிரந்தர அம்சமாகி, அதுவே நியதியாகியும்விட்டது.

மானிட சமுதாயத்தில் ஒரு பகுதியினர் - அதுவும் பெரும் பகுதியினர் - ஏழைகளாக, ஒடுக்கப்பட்டவர்களாக, அடக்கப்பட்டவர்களாகப் பின்தங்கிய நிலையில் துன்பங்களைச் சுமக்க-

மற்றொரு பகுதியினர் வளம் நிறைந்தவர்களாக, ஒடுக்குபவர்களாக, சுரண்டுபவர்களாக, வசதி, வாய்ப்புகளின் உச்சத்தில் மிளிர்கின்றார்கள்.

உலகமயமாதலினால் பூமிப் பந்து, பூகோளக் கிராமமாகச் சுருங்கி விட்டது என்று கூறினாலும், மானிட உலகம் இன்னும் இட்டு நிரப்ப முடியாத அகன்ற இடைவெளிகளின் ஊடாகப் பிளவுபட்டு நிற்கின்றது என்பதே யதார்த்தம்.

செல்வமும், வறுமையுமாக - முன்னேற்றமும், பின்னடைவுமாக - உயர் நிலையும், தாழ் நிலையுமாக - அடக்குதலும், அடக்கப்படுதலுமாக - மனிதரிடையேயும், இனங்களிடையேயும், சமூகங்களிடையேயும் பாரிய ஏற்றத் தாழ்வுகள் நீடிக்கின்றன. போர்கள், ஆக்கிரமிப்புகள், புரட்சிகள், போராட்டங்கள் என்று மனித சமூகம் மத்தியில் முரண்பாடுகளும், மோதல்களும் விரிவடைந்து வருகின்றன.

இவற்றுக்கு மத்தியிலேயே உண்மையான சமாதானம் குறித்து இந்த சமாதான தினத்திலே நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக் கின்றோம்.

தாராண்மை ஜனநாயகம் உன்னத - தலைசிறந்த - அரசியல் வடிவம் என்ற சித்தாந்தம் மேலோங்கி இருக்கையில், அதன் அடிப்படையே அபத்தமானது என்பதை நிரூபிக்குமாற் போல நமது இலங்கைத் தீவும், அதன் கொந்தளிப்பான அரசியல் வரலாறும், அநாகரிகமான ஆட்சிமுறை வடிவமும் உலகத்தின் முன் சாட்சியமாக எழுந்து நிற்கின்றன.

மனித உரிமைகளும், சுதந்திரங்களும் செம்மையாகப் பேணப் படாத ஜனநாயகம், மதிப்புடையது அன்று. ஒரு வகையில் அது சர்வாதிகார ஜனநாயகமாகி விடுகின்றது. இத்தகைய ஆட்சி முறைகளில் அநீதியும், அடக்குமுறையும் தலைதூக்க மனித உரிமைகள், சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள் மிதிக்கப்படுவது உலக நடைமுறையாகிவிட்டது. அதைத் தரிசிப்பதற்கான நாடாக இலங்கைத் தீவு மாறிவருவது நமக்குக் கேவலமான விடயம்.

ஜனநாயக ஆட்சி முறைமை என்ற உன்னத அரசியல் வடிவத்தின் கீழ் பெரும்பான்மைத் தரப்பு, சிறுபான்மைத் தரப்பைத் திட்டமிட்டு, அடக்கி, ஒடுக்குவதற்கும், அதன் தனித்துவத்தைச் சீரழிப்பதற்கும், அதன் இருப்பையே இல்லாமற் செய்வதற்கும் எடுக்கப்படும் கொடுங்கோன்மை நடவடிக்கைகளை சமாதானத்தின் பெயரால் மூடி மறைத்துவிட முடியாது.

அடக்கப்படும் இனத்திற்கு எதிரான அரச பயங்கரவாதத்துக்கு 'சமாதானத்துக்கான நடவடிக்கைகள்' என்று பொய் முலாம் பூசுவதோ -

அடக்குமுறைக்கு எதிரான அடக்கப்படும் இனத்தின் கிளர்ச்சியை - புரட்சியை - 'பயங்கரவாதமாக' சித்திரித்து பிரசாரப்படுத்துவதோ -

உண்மையான சமாதானத்தை - நிலைத்து நீடிக்கும் சமாதானத்தை - எட்டுவதற்கு உதவப் போவதில்லை.

உண்மையான - கௌரவமான - நீதியான - நியாயமான உரிமைகளுடன் கூடிய - அடக்குமுறையற்ற - அமைதி வாழ்வு ஒன்றை ஒரு தேசத்தின் சகல தரப்பு மக்களுக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் உண்மையான ஜனநாயம்; உண்மையான சமாதானம்; உண்மையான அமைதி.

ஆகவே, உண்மையான சமாதானம் பிறக்க வேண்டுமானால் முதலில் அடக்குமுறையாளர்கள் அகல வேண்டும்; அல்லது அகற்றப்பட வேண்டும். வரலாற்று அடக்குமுறையாளர்கள் தாமாக அடங்கா விட்டால், அவர்கள் அடக்கப்படுவதன் மூலமே அமைதியும், சமாதானமும் ஏற்பட முடியும். அதுதான் வரலாற்றுப் பாடம்.

## அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு:
# மூன்றாம் கட்ட உணவுப் பொருள் விநியோகம் உடன் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செப்.21

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடான மூன்றாம் கட்ட உணவுப் பொருள்கள் விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு ஆகிய நான்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, முன்னர் வழங்கப்பட்ட அளவுகளில் மக்களுக்கு கிடைக்கும்.

இம்மாதம் முதல் வாரத்தில் குடாநாட்டுக்கு வந்து சேர்ந்த 'றுகுணு' கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்களை, மக்களுக்குஉடனடியாக விநியோகிக் ஏற்பாடு செய்யுமாறு ப.நோ.கூ.சங்கங்களுக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:-

'றுகுணு' கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் மூன்றாவது கட்டமாக மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மூன்றாவது கட்ட விநியோகத்திற்காக ஆயிரத்து 585 மெற்றிக் தொன் அரிசி, 217 மெற்றிக் தொன் சீனி, 879 மெற்றிக் தொன் கோதுமை மா, 47 மெற்றிக் தொன் பருப்பு ஆகியன ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொண்ட ப.நோ.கூ.சங்கங்கள் உடனடியாக விநியோகத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இந்த விநியோகம் சீரான முறையில் இடம்பெறுவதை உறுதி செய்யும் வகையில், கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அல்லது அந்தந்தப் பிரதேசத்தின் உதவி அரச அதிபர்களுக்கு ப.நோ.கூ.சங்கங்கள் அறிவிக்க வேண்டும். நிவாரண விநியோகத்தைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சகல கிளைகளுக்கும் சென்று விநியோகத்தை மேற்பார்வை செய்ய வேண்டும்.

விநியோகம் தொடர்பாக குறைபாடுகள், முறைப்பாடுகள் இருப்பின் செயலகத்துடன் 222 2774, 222 2233, 222 2234 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். - என்றார் அரச அதிபர்.

(அ-1-79)

# வெளிமாவட்ட மாணவர் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு போக்குவரத்து வசதி செய்து தருக
## அரச அதிபரிடம் மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.21

குடாநாட்டில் தங்கியுள்ள வெளிமாவட்ட மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்குமாறு, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது.

துணைவேந்தர் ஊடாக அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடித்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :- வெளிமாவட்ட மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் உள்ளனர். அவர்கள் இங்கு பாதுகாப்பு உள்ளிட்ட உணவு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொண்ட வண்ணமுள்ளனர்.

தற்போது நோய்வாய்ப்பட்ட நிலையில் சில மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பல மாணவர்கள் உடல், உள நிலை பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

எனவே உரிய தரப்பினரோடு தொடர்பு கொண்டு எமது மாணவர்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

- என்று உள்ளது.

## தீவகம் செல்ல நேற்று அனுமதியில்லை

யாழ்ப்பாணம், செப்.21

தீவகத்திற்கான போக்குவரத்துகள் நேற்றும் படையினரால் நிறுத்தப்பட்டிருந்தமையால் தீவகத்திற்கு எவரும் செல்லமுடியவில்லை.

அல்லைப்பிட்டிக்கு அப்பால் தீவுப் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாகவே தீவுப்பகுதிக்கான போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

தீவுப்பகுதியில் கடமைபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அரச; கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் ஆகியோர் அலுவலகங்களுக்குச் செல்ல முடியாது திரும்பிச் செல்ல நேர்ந்தது.

(68-95-111-203)

# அறிவுறுத்தலை மீறும் பேக்கரிகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்
## அரச அதிபர் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், செப்.21

விதிமுறைகள் மீறும் பேக்கரிகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அவற்றுக்கு மா விநியோகமும் நிறுத்தப்படும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் சகல பேக்கரி உரிமையாளர்களுக்கும் இதற்கான அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முரணாகச் சில பேக்கரிகள் செயற்படுகின்றன என தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் -

அதன்பின்பே கடுமையான அறிவுறுத்தல்களை தாம் விடுத்திருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது :- 'றுகுணு' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோதுமை மாவின் ஒரு பகுதியான 400 மெற்றிக் தொன் மா பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த மாவில் 450 கிராம் நிறையுடைய பாணை சுகாதார முறைப்படி தயாரித்து விநியோகிக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட பாணை பேக்கரிகளில் மட்டுமே வைத்து விற்பனை செய்யாமல், 11.08.2006க்கு முன்பு இருந்த நடைமுறைப்படி சகலருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

விநியோகிக்கப்பட்ட மாவில் பாண் மட்டுமே தயாரிக்க வேண்டும். வேறு பொருள்களை தயாரிக்கவோ வெளியில் விற்கவோ அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நடைமுறைகளை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கான மா விநியோகமும் உடன் நிறுத்தப்படும். - என்றார் அரச அதிபர்.

(அ-1-79)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

வடமராட்சி, செப் 21

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 5ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 6ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 7ஆம் திகதி கேணித்திருவிழாவும் இடம்பெற்று திருவிழா நிறைவடையும்.

ஊரடங்கு அமுலைக் கவனத்தில் கொண்டு குறித்த நேரத்திற்குள் திருவிழாக்கள் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

(1-173-203)

# கருணா குழுவுடனான உறவை துண்டிக்கிறது ஈ.என்.டி.எல்.எவ்.

கருணா அணியுடன் சேர்ந்து தாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்திய 'தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி' என்ற கூட்டு முன்னணியிலிருந்து தாங்கள் விலகுகின்றனர் என ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ.என்.டி.எல்.எவ்வினர்) அறிவித்திருக்கின்றனர்.

சென்னையை மையமாகக்கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் சார்பில் அதன் தலைவர் ஞா. ஞானசேகரன் நேற்று விடுத்த அறிக் கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''அனைத்து அங்கத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் தெரியப்படுத்திக் கொள்வது'' - என்ற தலைப்பில் அவர் விடுத்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''எங்களது ஈழந் தேசிய ஜனநாயக முன்னணி (ஈ.என்.டி.எல்.எவ்.) இயக்கத்துக்கும், கருணாவால் ஏற்படுத்தப்பட்ட 'ரி.எம்.வி.பி.' இயக்கத்துக்குமிடையில் கடந்த 15-10-2004 அன்று ஏற்படுத்தப்பட்ட தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி (ரி.ஐ.வி.எம்.) என்ற கூட்டு முன்னணி இன்றைய தினமான 20-09-2006 முதல் செயற்பட மாட்டாது என்று அறிவிக்கப்படுகின்றது.

கருணாவின் இயக்கத்துக்கும், எங்களது இயக்கத்துக்குமான அனைத்துத் தொடர்புகளும் இன்று முதல் (20-09-2006) துண்டிக்கப்படுகின்றன. ஈழத்திலும், வெளிநாடுகளிலும் எங்களது இயக்கத்தின் அங்கத்தினர் மற்றும் ஆதவாளர்கள் யாரும் கருணாவின் இயக்க அங்கத்தினர் எவருடனும் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.'' - என்று உள்ளது.

# ஓட்டமாவடியில் பிரதேச சபையின் செயலாளர் மீது சூடு!

ஏறாவூர், செப். 21

ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் மீது நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீராவோடை நூலகக் கட்டடத்திற்கு அருகில் வைத்து அவர் மீது இரவு 10.10 மணியளவில் நான்கு துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. எனினும், பிரதேச சபை செயலாளர் எவ்வித பாதிப்புகளுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச சபை செயலாளர் எஸ்.எம். சஹாப்தீன், மீராவோடையில் உள்ள தனது தாயாரின் வீட்டுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கும்போதே வீதியில் மறைந்திருந்த நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச் சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையற்ற பேச்சுக்கு இணங்கியமைக்கு தலைவர் பிரபாவுக்கு யாழ்.ஆயர் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

நிபந்தனையற்ற பேச்சுக்கு இணங்கிய விடுதலைப்புலிகளின் தலைவருக்கு தமிழ் மக்களின் பேரால் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் என யாழ்.ஆயர் அவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடாக விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கடித்திலேயே இதைத் தெரிவித்துள்ளார்.

அக்கடித்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிய ஒரு அமைதியின் பின்னர் அண்மைக் கால நிகழ்வுகளால் மீண்டும் ஒரு கொடிய போரையும் பயங்கர பட்டினிச் சாவையும் எதிர்நோக்கும் அபாயத்தில், அதிர்ச்சியில் உறைந்து போயுள்ள தமிழ் மக்கள் வாழ்வில் இணைத்தலைமை நாடுகளின் பேச்சுவார்த்தைக்கான முயற்சி அமைதிப் பெருமூச்சை ஏற்படுத்தியுள்ளது. போரையும் அதன் பன்முக வடிவங்களையும் கடந்த இரு தசாப்தங்களாக அனுபவித்து இனி இந்த மண்ணில் போரே வேண்டாம் என்ற நிலைக்கு வந்துள்ள தமிழ் மக்கள் இன்னும் ஒரு போரைத் தாங்கும் மனசக்தி அற்றவர்கள். பாதுகாப்பான இடங்களையும் அன்றாட உணவுத்தேவையையும் நிறைவு செய்வதற்கு என்ன செய்வோம் என்ற அங்கலாய்ப்பில் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் இருந்த மக்கள் அமைதியான பாதுகாப்பான மகிழ்ச்சியான வாழ்வை தம் சொந்த வீடுகளில் வாழவே விரும்புவர்.

தமிழ் மக்களின் உள்ளக் கலக்கங்களையும் மன ஏக்கங்களையும் அறிந்து கொண்டவர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு இணங்கியிருப்பது இலங்கை வாழ் தமிழ் மக்கள் எல்லோர் மனங்களிலும் ஒரு மகிழ்ச்சிப் பிரகாவத்தை ஏற்படுத்தி உள்ளது. தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை மனதில் கொண்டு தமிழ் மக்கள் இனியும் வேதனையை அனுபவிக்கக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு இணங்கிய விடுதலைப் புலிகளின் தலைவருக்கு தமிழ் மக்களின் பெயரால் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்..- என்றுள்ளது.



ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்குச் சென்றவேளை நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்ரோல்ரன் பேர்க்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வே விசேட பிரதிநிதி ஜோன் ஹான்ஸன் போவர், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## பொத்துவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் எடுக்கப்பட்டது. அமைச்சர்களான ஏ. எச். எம். பௌஸி, பேரியல் அஷ்ரப், அமீரலி, பிரதியமைச்சர்க ளான ஹுசைன் பைலா, அன்வர் இஸ்மாயில், மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

பொத்துவில் பகுதி முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்து முஸ்லிம் அமைச்சர்மார் பாதுகாப்புச் செயலரின் கவனத்திற்கு கொண்டுவந்தபோது பாதுகாப்புச் செயலருக்கும் அமைச்சர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

நீண்டவாதப் பிரதிவாதங்களின் பின்னர், பொத்துவில் பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அங்குள்ள விசேட அதிரடிப்படையினரை அகற்றுவதற்கும், அங்குள்ள அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இது விடயத்தில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதென்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## இந்திய வெளிவிவகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்குவைத்து ஊடகவியலாளரிடம் கருத்துவெளியிட்ட இரா.சம்பந்தன் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியாவால்தான் தீர்வுகாணமுடியும். இந்தியாவுக்கும், தமிழ் மக்களுக்கும் வரலாற்று ரீதியான உறவு உள்ளது. ஸ்ரீலங்காவும் இந்தியாவும் துடுப்பாட்டப் போட்டியில் மோதினால்கூட இந்தியாவையே நாம் ஆதரிக்கின்றோம். 99 வீத தமிழர்கள் இந்தியாவால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என நம்புகின்றனர். வேறு எந்த நாட்டினால் இதனைச் செய்யமுடியும். வேறு எந்த நாட்டாலும் செய்யமுடியாது. எமக்கு இந்தியாமீது பாசம் உண்டு - என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகையில்,-

இந்தியாவுடன் ஈழத்தமிழர்களுக்கு நெருக்கமான உறவு உண்டு. அது வரலாற்று உண்மை. இலங்கை இனப்பிரச்சினையின் மூலகாரணத்தை இந்தியாவால் மட்டுமே புரிந்துகொள்ளமுடியும். எமது துன்பங்கள் தொடர்பில் இந்தியாவால்தான் அனுதாபம் கொள்ளமுடியும் - என்றார்.

இந்தியப் பிரதமருடனான தமிழ்க் கூட்டமைப்பினரின் சந்திப்புப் பெரும்பாலும் இன்று நடைபெறலாம் என் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-12)

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த சானுன் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தங்களது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் திருகோணமலை - கண்டிவீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இக்கொலைகளைப் புரிந்துள்ளனர்.

இதேவேளை-

திருகோணமலை புறநகர்ப் பகுதியில் கணேஸ் ஒழுங்கையில் வைத்து கனரக வாகன ஓட்டுநரான சத்தியசீலன் என்பவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். (ஐ-12)

## ஏ-9 வீதி உடன்படிக்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் -

குடாநாட்டுக்கு ஏ-9 வீதிக்குப் பதிலாக மாற்றுவழியொன்றைப் போக்குவரத்துக்காகத் திறப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது என்று அமைச்சரும், அரச பேச்சாளருமான ஹெகேலிய ரம்புக்வெல கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

பெரும்பாலும் கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாக பூநகரி மார்க்கத்தில் ஒரு வழியை ஏற்படுத்துவது குறித்தே அரசு பரிசீலிக்கின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையிலேயே ஏ-9 வீதியை மீண்டும் திறக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்திவருகின்றனர். ஏ-9 வீதியைத் திறந்து மீண்டும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கண்காணிப்புடன் சிவில் போக்குவரத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று புலிகள், அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பிடமும், சர்வதேச சமூகத்திடமும் கோரி வருகின்றனர்.

ஏ-9 வீதிக்குப் பதிலாக மாற்று வழிகளைத் திறக்க அரசு எடுக்கும் எந்த முயற்சிக்கும் புலிகள் உடன்படப்போவதில்லை என்று புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு தனது இராணுவ நலன் கருதி ஏ-9 வீதிக்குப் புறம்பான மாற்றுப் பாதையொன்றைத் திறக்கத் திட்டமிட்டுவருகிறது. இதனைப் புலிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

"ஏ-9 எனப்படும் கண்டி - யாழ் - நெடுஞ்சாலை போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக திறக்கப்பட்டது. போர்நிறுத்த உடன்படிக்கையில் 'இயல்பு நிலையை மீளக்கொணர்வதற்கான நடவடிக்கைகள்' என்ற உப பிரிவின் 2.10 ஷரத்தில் இது குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"இராணுவப் பயன்பாடற்ற பொருள்களை எடுத்துச் செல்வதற்கும், பிரயாணிகள் பயணம் செய்வதற்கும் கண்டி - யாழ். வீதியை (ஏ-9) இரு தரப்பினரும் திறந்துவிட வேண்டும்.

" இதுதொடர்பான ஒழுங்குகள் நோர்வே அரசின் உதவியுடன் போர்நிறுத்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளிலிருந்து 30 தினங்களுக்குள் செய்துமுடிக்கப்படவேண்டும் - என்று போர்நிறுத்த உடன்படிக்கை கூறுகின்றது.

"எனவே, இந்தத் தரைப்பாதை விடயம் போர்நிறுத்த உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்டது. அதனை உடனடியாக நடைமுறைப் படுத்துவதே பொருத்தமானது."

- இவ்வாறு புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-1)

## ஹர்த்தாலின்போது பொத்துவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள விசேட அதிரடிப் படை முகாமின் பொறுப்பதிகாரியான பிரதம இன்ஸ்பெக்டர் குணரட்ணவை இடமாற்றம் செய்யுமாறு பொத்துவில் முஸ்லிம் மக்கள் கோரி வருவது தெரிந்ததே.

பொத்துவில் பெரிய உல்லைப் பகுதியில் 11 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருந்ததைக் கண்டித்த நேற்று ஹர்த்தால் இடம்பெற்றது. வீதிகளில் பொது மக்கள் கூடி நின்று ரயர்களை எரித்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். காலை 10 மணியளவில் அந்த இடத்துக்கு வந்த விசேட அதிரடிப்படையினர் மக்களைக் கலைந்து செல்லுமாறு பணித்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் பொது மக்களுக்கும், விசேட அதிரடிப்படையினருக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

திடீரென அதிரடிப் படையினர் சரமாரியாகப் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 முஸ்லிம்கள் காயமுற்றனர். இவர்களில் படுகாயமுற்ற நால்வர் உடனடியாகக் கல்முனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். ஏனைய 10 பேரும் பொத்துவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில் - தமண பிரதேசத்தில் நீர்ப்பாசனக் கால்வாயைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த 11 முஸ்லிகள் கொடூரமான முறையில் கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே. இச்சம்பவத்தின் பின்னர் பொத்துவில் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது. ஆர்ப்பாட்டம், ஹர்த்தால், கடையடைப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நிலைமையைப் பார்வையிடவும், பலியானவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் நேற்று முன்தினம் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தலைமையிலான குழுவினர் பொத்துவில் சென்றிருந்தனர். அங்குள்ள மக்கள் விசேட அதிரடிப்படை ஐ.பி. குணரட்ணவை இடமாற்றும்படி ஏகோபித்த குரலில் வேண்டுகோள் விடுத்திருந்தனர். (ஐ)

## பேச்சுமூலம் தீர்வுகாணும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலவே எமது நாட்டிலும் பயங்கரவாதம் தலை விரித்துள்ளது. இதனால் நாட்டின் முன்னேற்றத்துக்கு ஊறு விளைவித்துள்ளது; ஜனநாயகத்தையும் ஆட்டம் காணவைத்திருக்கிறது. மனித அடிப்படை உரிமைகளுக்கும் இந்த பயங்கரவாதம் பெரும் சவாலாகிவிட்டது.

சிறுபான்மை மக்களின் கவலைகளை, குறைபாடுகளை பகடைக்காயாக வைத்து நாட்டில் ஈவிரக்கமற்ற பயங்கரவாத இயக்கம் ஒன்று தோன்றி எமது நாட்டை கடந்த 23 வருடங்களாக பயமுறுத்தி வருகிறது.

உலகம் சமாதானத்தையும், சமரச பேச்சுகளையும் நாடிச்செல்லுகிற காலம் இது. ஆனால், எமது நாட்டிலுள்ள விடுதலை புலிகள் இயக்கமோ வன்முறையைத்தான் நாடிச்செல்கிறது. தற்கொலை குண்டுத்தாக்கு தல் நடத்துகிறார்கள். ஆள்களைப் படுகொலை செய்கிறார்கள். கண்டபடி ஆயு தங்களால் சுடுகிறார்கள். யுத்தத்திற்காக பலாத்காரமாக சிறுவர்களை படையில் சேர்க்கிறார்கள்.

புலிகள் மனித உரிமைகளை மீறுகிறார்கள்; ஜனநாயக விழுமியங்களை சிதறடிக் கிறார்கள். அரசிய தலைவர்களை கொல்லுகிறார்கள், மனி உரிமை ஆர்வலர்களை சாகடிக்கிறார்கள். இன, மத பேதமின்றி ஆள்களை ஒழித்துக் கட்டுகிறார்கள், சிறுவர்களையும் ஒழித்துக் கட்டுகிறார்கள்.

### முஸ்லிம்கள்

வடக்கிலிருந்து 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் மக்களை அவர்களது இருப்பிடத்திலிருந்தே விரட்டியடித்திருக்கிறார்கள். இன்றும் அவர்கள் அகதிகளாகவே இருக்கின்றனர்.

### வெற்றியின் பின்

ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றி பெற்ற பின்னர், பிரச்சினையைத் திறந்த மனதோடு ஆராய்ந்தேன். புதிய அணுகுமுறையில் தீர்வொன்றைக் காண முன் வந்து தேசியகருத்தொருமைப்பாடொன்றை எட்டுவதன் மூலம் கௌரவமான தீர்வொன்றை பிளவுபடாத இலங்கைக்குள் காண விரும்பினேன்.

இப்பொழுது நாட்டில் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கான யோசனைகளை, ஆலோசனைகளை கமிட்டி மூலம் தயாரிப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன் றைக் காண்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கையில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறேன்.

### பழைமையான ஜனநாயகம்

ஆசியாவிலுள்ள மூத்த ஜனநாயக நாடுகளில் நமது நாடும் ஒன்று. இங்கு ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்; பகைமைகளுக்கிடையே ஓர் இடைவெளி உருவாக்கப்படவேண்டும். மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனித உரிமைகள் அபிவிருத்தி மேம்பட வேண்டும். அப்பொழுதுதான் வெற்றிகரமான, நிலைத்து நிற்கக்கூடிய சமாதான நடைமுறையை முன்னெடுக்க முடியும்.

### ஜனநாயக வழி

விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் எமக்கு பூரண ஆதரவைத் தரும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

ஐ.நா. கடந்த வருடம் பல முன்னேற்ற பணிகளைச் செய்திருக்கிறது. அதற்காக எனது பாராட்டுகள் உரித்தாகும்.

சமாதானத்தைக் கட்டி எழுப்பும் கமிஷன் ஒன்றை ஸ்தாபிக்கும் முயற்சியில் ஐ.நா. வெற்றிகொண்டிருக்கிறது. இது ஐ.நாவின் வரலாற்றில் மற்றொரு மைல் கல் லாகும்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி தமது பேச்சின் இறுதியில் ஐ.நாவின் புதிய பொதுச் செயலாளர் நாயகம் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுபவர், ஐ.நாவின் அமைப்பு முறைகளை நன்கு தெரிந்த அனுபவசாலியாக இருக்க வேண் டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## களுவாஞ்சிக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோர் வெடித்திருப்பின் பாரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும் எனவும் அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவின் சித்தாண்டி, வந்தாறுமூலை, செங்கலடி மற்றும் கொம்மாதுறைப் பகுதிகளிலும் தினமும் பாதுகாப்புப் படையினரின் ரோந்து நடவடிக்கைகளின்போது கண்ணிவெடிகளை மீட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.